# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No.251/2022

| | |
|---|---|
| | Prosecution PW 5 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | ரவீந்திரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 03.10.2023

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் அண்ணா நகரில் குடியிருந்து வருகிறேன். நான் இன்போசிஸ் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 18.05.2022 ம் தேதி காலை சுமார் 08.45 மணியளவில் நான் கோவை ரோட்டில் உள்ள ஏஞ்சல் டீக்கடையில் இருந்தபோது, அப்போது கண்ணாத்தாள் மற்றும் அவரது மாமியாரும் கரூர்-கோவை ரோட்டில் ரெங்கநாயகிபுரம் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக நடந்து செல்லும்போது

s/d. K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்

ரெங்கநாயகிபுரம் ரோட்டில் உள்ளே இருந்து வெளியே வந்த TN 55 AK 7012 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரி இடதுபுறமாக திரும்பும்போது, நடந்து வந்த கண்ணாத்தாளின் மாமியாரின் இரண்டு கால்கள் மீதும் லாரி ஏறி இறங்கியது. அடிபட்ட கண்ணாத்தாளின் மாமியாரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கண்ணாத்தாளின் மாமியார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தகவல் கேள்விபட்டேன். விபத்து ஏற்படுத்திய டிப்பர் லாரியின் ஓட்டுனர் ஆஜர் எதிரிதான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

s/d. K. Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்